[1972 மார்ச் 7

Ferro-Cement Boats.

*341 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether the Ferro-Cement Boat built at Boat Building Yard in Madras is to be launched; and

(b) if so, the features of this boat?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) (1) இரும்பு-சிமிட்டியிலானதும் 35 அடி முதல் 45 அடி வரை நீளமுடையதுமான படகுகளின் உடற்பகுதி எடை, மரம் உருக்கு அல்லது கண்ணாடி இழையிலான படகுகளின் உடற்பகுதி எடைக்குச் சமமானதாகும். 45 அடிக்கு மேற்பட்டு நீளமுடையதும், இரும்பு-சிமிட்டியிலானதுமான படகுகள், மரம், உருக்கு அல்லது கண்ணாடி இழையினால் ஆன படகுகளின் எடையைக் காட்டிலும் எடை குறைவாக உள்ளன.

(2) இரும்பு-சிமிட்டியிலான படகு விரைவதில்லை அல்லது துருப்பிடிப்பதில்லை; மின்னாற்பகுப்பு (Electrolysis) மூலம் பாதிக்கப்படுவதில்லை. மரம் அல்லது உருக்கிலான படகுகளின் உடற்பகுதிகளைப் பேணிவருவதில் உள்ள பணிச் சுமையும் கவலையும் இத்தகைய படகுகளின் உடற்பகுதியைப் பேணி வருவதில் இல்லை.

(3) இரும்பு-சிமிட்டியிலான படகு, ஓட்டுகள் எதும் இல்லாமல் ஒரே வார்ப்படமாகக் கட்டப்பட்டுள்ளதால் படகில் கசிவு எற்படக் காரணமில்லை.

(4) இரும்பு-சிமிட்டி அமைப்பு வெப்பத்தைக் குறைவாகக் கடத்தும் திறனுடையதாகும்.

(5) இரும்பு-சிமிட்டியினால் செய்யப்பட்ட படகின் உடற்பகுதிக்கான செலவு, மரம் அல்லது உருக்கினால் செய்யப்பட்ட படகின் உடற்பகுதிக்கான செலவைக் காட்டிலும் 50 சதவீதம் குறைவாக இருக்குமெனத் தெரிகிறது.

(6) துளையிடுவதில் பெயர்போன கடற்பூச்சிகளால் இப்படகு பாதிக்கப்படமாட்டாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்போது நாம் கொடுத்திருக்கும் மெகனைஸ்டு போட்டுகளே ஹார்பரில் தூங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் உள்ள குறைபாடுகள் என்ன என்பதை

1972 மார்ச் 7]

அரசு ஆராய்ந்ததா ? இதை ஒழுங்கு செய்த பிறகுதான் பெர்ரோ சிமின்ட் போட்டுகளைக் கொண்டுவர வேண்டும் என்பதை முடிவு செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது கூறிய பதிலில் இருந்தே—மெகனைஸ்டு போட்டுகள் துருப்பிடிக்கிறது, பூச்சி அரிக்கின்றது. ஓட்டை விழுகிறது—ஆகையினால் தான் இரும்பினால் கட்டப்படுகிற அவற்றுக்குப் பதிலாக சிமின்டினால் இந்த பெர்ரோ—சிமின்ட் போட்டைக் கட்ட நமது மீனளத்துறை முன்வந்திருக்கிறது என்று அறியலாம். அதோடு மெக்கனைஸ்டு போட்டைக் காட்டிலும் இதற்கு 50 சத வீதம் செலவு குறைவாகவே இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்படியானால் மெக்கனைஸ்டு போட்டுகளை யார் யாருக்குக் கொடுத்திருக்கிறோமோ அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கும் இந்த பெர்ரோ—சிமிண்ட் போட்டை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : எதுவுமே இனிமேல் கொடுக்கிறவர்களுக்குதான் அரசாங்கம் இதுபோன்ற போட்டுகளை வழங்க முன்வருமே தவிர முன்னே வழங்கப்பட்டவர்களுடைய போட்டுக்களையும் திரும்பப்பெற்று அவற்றை எல்லாம் நஷ்டக் கணக்கில் எழுதுவது சாத்தியம் இல்லை.

திரு. செ. கந்தப்பன் : இப்படிப்பட்ட சிமிண்ட் படகுகளைக் கட்ட முன்வந்திருப்பது நம்முடைய மாநிலத்தில் ஒப்பற்ற சாதனையாகும். கடல் பகுதி மீன் வளர்ச்சியைக் குறித்து—அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தில் இருந்து இந்தப் படகு களை நம்மிடம் இருந்து வாங்குவதற்கு வெளிநாடுகள் ஏதாவது முன் வந்திருக்கின்றனவா ? உள்நாட்டில் விற்பனை செய்வதற்கும் நம் அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தப் படகுகளை நம்முடைய மாநில உபயோகத்திற்குத்தான் தயாரித்திருக்கிறோம். அமெரிக்க நாட்டில் இருந்து வந்தவர்கள் இதைப் பார்வையிட்டு, இதுபற்றிய விளக்கங்களை எல்லாம் கேட்டார்கள். அதுபோன்ற படகுகளை பின்னால் நம்மிடம் இருந்து கேட்பார்களோ என்னமோ இப்போது நாம் எதுவும் சொல்ல முடியாது.

[1972 மார்ச் 7

திரு. ஏ. எம். இராஜா : இப்போது மேல்நாடுகளில் ப்ளாஸ்டிக் கினால் கப்பலே கட்டுவதாக செய்தித் தாள்களில் இருந்து அறிகிறோம். அந்த முறையில் நம் நாட்டிலும் ப்ளாஸ்டிக்கினால் படகு கட்ட அரசு ஏதாவது முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : படகுகள் கட்டுவதற்கு எல்லாவிதமான முறைகளையும் இந்த அரசு நன்கு பரிசீலனை செய்த பிறகுதான்—இதுபோன்ற பெர்ரோ—சிமிண்ட் படகுகளைக் கட்ட முன்வந்திருக்கிறது.

திரு. நா. வீராசாமி : பெர்ரோ—சிமிண்ட் படகுகள் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு கட்டப்படுகின்றன? விலை என்ன ஆகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது 38 அடிப் படகு ஒன்று அரசுத் துறையில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. தற்காலிகமாக வெள்ளோட்டமும் விடப்பட்டிருக்கிறது. மேலும் சென்ற ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் காரணமாக 8 படகுகள் கட்டப் பட்டு வருகின்றன. இந்த ஆண்டு அதிகமாக இருக்க முடியும்.

சாதாரணமாக மெக்கனைஸ்டு படகு ஹல் 38 அடி நீளம் கட்டுவதற்கு 65 ஆயிரம் ரூபாய் ஆகும் என்றால் இந்தப் படகுக்கு 33 ஆயிரம்தான் ஆகும். 32 அடி படகு ஹல் கட்டுவதற்கு 51 ஆயிரம் ஆகும் என்றால் இதற்கு 25 ஆயிரம்தான் ஆகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்படியானால் இந்தப் படகுகளை மீனவர்களுக்குக் கொடுக்கிறபோது என்ன விலைக்குக் கொடுப்பார்கள் ? தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கிறபோது என்ன விலைக்குக் கொடுப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இரண்டு பேர்களுக்கும் விலையில் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. ஆனால் மீனவர்களுக்கு சப்ஸிடி கொடுக்கிறோம். மற்றவர்களுக்கு சப்சிடி கொடுப்பதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]